**உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டம் (நிகழ்ச்சித்திட்டக் கூறு) - 2024 யூன் 28**

---

உயர் கல்வி விரிவாக்கல் மற்றும் அபிவிருத்தி செயற்பாட்டை துரிதப்படுத்தல் செயற்திட்டத்தின் (நிகழ்ச்சித்திட்டக் கூறு) 2024 யூன் 28 இல் முடிவடைந்த ஆறு மாதங்கள் காலப்பகுதிக்கான முடிவுறுத்தல் நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிச குடியரசிற்கும் மீள்நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி மற்றும் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2017 யூலை 17 ஆம் திகதிய 8743 எல்கே ஆம் இலக்க கடன் உடன்படிக்கை மற்றும் 6026 எல்கே ஆம் இலக்க நிதியளித்தல் உடன்படிக்கை என்பவற்றின் 4.09(ஆ) உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

கடன் மற்றும் நிதியளித்தல் உடன்படிக்கைகளின் பிரகாரம், முன்னாள் உயர் கல்வி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய கல்வி அமைச்சு செயற்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் அரச பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம், உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம் மற்றும் அமைச்சு மற்றும் UGC ஆல் அங்கீகரிக்கப்பட்ட அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்கள் என்பன செயற்திட்டத்தின் அமுல்ப்படுத்தல் முகவர்களாக உள்ளன.

அரச பல்கலைக்கழகங்கள், இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம், உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம் மற்றும் அரசசார்பற்ற உயர்கல்வி நிறுவனங்களில் முன்னுரிமைத் துறைகளில் (விஞ்ஞானம், தொழில்நுட்பம், பொறியியல் மற்றும் மருத்துவம்) மாணவர் உட்சேர்க்கையை அதிகரித்தல், பட்டப்படிப்பு நிகழ்ச்சித்திட்டங்களின் தரத்தை மேம்படுத்துதல் மற்றும் உயர்கல்வித் துறையில் ஆராய்ச்சி மற்றும் கண்டுபிடிப்புக்களை மேம்படுத்துதல் என்பன செயற்திட்டத்தின் குறிக்கோள்களாகும்.

கடன் மற்றும் நிதியளித்தல் உடன்படிக்கைகளின் பிரகாரம் செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 18,136 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 100 மில்லியனானதுடன் இது சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது.

செயற்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 மார்ச் 01 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2024 யூன் 28 இல் பூர்த்திசெய்யப்பட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2024 யூன் 28 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான முடிவுறுத்தல் நிதிச் செயலாற்றல் கூற்றினையும் அதனது காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

**1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்**

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை

நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. பௌதீக செயலாற்றல்

### 2.1 ஒப்பந்த நிர்வாகம்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் 2021 திசெம்பர் 15 இல் ரூபா 432,400,031 தொகையான ஒப்பந்த பெறுமதியில் பொறியியல் தொழில்நுட்ப பீடத்திற்கான கட்டிடம் மற்றும் தொடர்புடைய கட்டமைப்புக்கான ஒப்பந்தம் AHEAD செயற்திட்டத்தால் வழங்கப்பட்டது. உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாணப் பணிகள் 2023 யூன் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட வேண்டியதுடன் அது 2023 திசெம்பர் 31 மற்றும் 2024 மார்ச் 31 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது. எனினும், 2024 மார்ச் 31 வரையிலும் கட்டுமாணப்பணிகள் முடிவடைந்திருக்காமை அவதானிக்கப்பட்டிருந்ததுடன் 40 சதவீத நிர்மாணப் பணிகள் 2024 மார்ச் 31 இல் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. | விடயம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. | செயற்திட்ட நோக்கங்களை அடைவதற்கு பணிகளை திட்டமிட்டவாறு விரைவாகப் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 18 வேட்பாளர்களில் மூன்று பேர் தங்கள் PHD பட்டப் படிப்பை ரத்து செய்திருந்தனர் அல்லது இடைநிறுத்தி வைத்திருந்தனர், மேலும் செயற்திட்ட மானியத்தால் ரூபா.11,537,940 செலவிடப்பட்டது. இருப்பினும், கிழக்குப் பல்கலைக்கழகம் அந்த வேட்பாளர்களிடமிருந்து ரூபா.4,739,430 தொகையை அறவிட தேவையான நடவடிக்கை எடுக்கவில்லை. | கல்விசார் தாபனக் கிளை மானியத்தை அறவிட நடவடிக்கை எடுக்கும். | பட்டங்களை நிறுத்தி வைத்த வேட்பாளர்களிடமிருந்து மானியத்தை வசூலிக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் இச் செயற்திட்டத்தின் கீழ் மருத்துவ பீடத்தின் நோயியல் திணைக்களத்திற்காக நிர்மாணிக்கப்பட்ட | ஒதுக்கப்பட்ட நிதி இல்லாததால் தளங்களின் எண்ணிக்கையைக் குறைக்க முடிவு செய்யப்பட்டது. கிடைக்கக்கூடிய நிதியுடன் 3 | விரும்பிய செயற்திட்ட நோக்கங்களை அடைய |

| | | |
|---|---|---|
| கட்டிடமொன்று 04 மாடிகளுடன் நிர்மாணிக்கப்படுவதற்கு திட்டமிடப்பட்ட போதிலும், 02 மாடிகள் மாத்திரமே பூர்த்தி செய்யப்பட்டு பல்கலைக்கழகத்திடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. கழிவுகளை அகற்றுவதற்கான குழாய் அமைப்பு மற்றும் ஆய்வகத்திற்குத் தேவையான பள்ளத்தாக்கு, தீயை அணைக்கும் கருவிகள், புதிய காற்று வழங்கல் மற்றும் எரிவாயு அமைப்புகள் போன்ற வேலைகளை ரூபா.4,582,160 செலவில் அந்த 02 தளங்களின் பணிகளை முடிக்கத் தவறியதால், அந்த தளங்களிலிருந்து எதிர்பார்க்கப்படும் நன்மைகளைப் பெற முடியவில்லை. | தளங்களும் நிறைவடைந்துள்ளதுடன் மேலும் 3 தளங்களும் மாணவர் கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் முதுகலை கற்பித்தல் நடவடிக்கைகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன. மாணவர் பகுதி என நியமிக்கப்பட்ட தரை தளம் கட்டுமானத்தில் உள்ளதுடன் தற்போது தேசிய நோயெதிர்ப்பு கட்டிடமாக பயன்படுத்தப்படவில்லை.<br><br>அந்த கட்டிடத்திற்கு அருகில் கட்டுமானத்தில் உள்ளது, மேலும் கட்டுமானம் முடியும் வரை அந்த பகுதி பாதுகாப்பாகவும் பொருத்தமானதாகவும் இல்லை. | திட்டமிட்டபடி பணிகளை விரைவுபடுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 2.2 குறைவாகப் பயன்படுத்திய வளங்கள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | சப்ரகமுவ பல்கலைக்கழகத்தின் இரண்டு பசுமை இல்லங்களின் பணிகள் 2023 செப்தெம்பர் இல் ரூபா.8,582,703 செலவில் நிறைவடைந்தன, ஆனால் அவை பயிர்ச்செய்கை மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படாமல் ஒரு வருடத்திற்கும் மேலாக செயலிழந்து கிடந்தன. | தற்காலிக பயன்பாட்டு விநியோகத்துடன் பயிர்ச்செய்கை நடவடிக்கைகள் விரைவில் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது என்பதை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்வதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம், அதே நேரத்தில் பீட வளாகத்திலிருந்து நீர் மற்றும் மின்சாரத்திற்கான நிரந்தர இணைப்புக்காக நாங்கள் காத்திருக்கிறோம். | பசுமை இல்லங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | AHEAD செயற்திட்டத்தின் மூலம் வடமேற்கு பல்கலைக்கழகத்தின் மருத்துவம், தொழில்நுட்ப பீடம் மற்றும் கால்நடை, மீன்வளம் மற்றும் ஊட்டச்சத்து பீடங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா.8,013,485 மதிப்புள்ள ஆய்வுகூட உபகரணங்கள் 2024 திசெம்பர் 31 வரை செயல்படாமல் இருந்தன, அதே நேரத்தில் ரூபா.6,168,402 மதிப்புள்ள ஆய்வுகூட உபகரணங்களின் உத்தரவாத காலம் 2024 யூன் இல் காலாவதியாகிவிட்டது. | ஆர்டி-பிசிஆர் இயந்திரம்-ஆய்வுகூட பணிகள் இன்னும் நிறைவடையாததால், சோதனை நோக்கங்களுக்காக இதைப் பயன்படுத்த முடியவில்லை. | ஆய்வுகூட உபகரணங்களை வினைத்திறனாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |